## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஜுன் 20-ம் தேதி முதல் ஜுன் 24-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

***முந்தைய வார வானிலை (16.6.15- 18.6.15)***

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 23- 27 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26- 27 |
| வானம் (ஆக்டா) | 7- 8 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 61- 66 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 53- 68 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 9- 14 |
| காற்றின் திசை | 290 |

***24.6.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு***

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>20.6.15 | நாள் 2<br>21.6.15 | நாள் 3<br>22.6.15 | நாள் 4<br>23.6.15 | நாள் 5<br>24.6.15 |
| மழை (மி.மீ.) | 0 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34 | 34 | 35 | 35 | 35 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 27 | 27 | 27 |
| வானம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 60- 65 | 60- 65 | 55- 65 | 55- 62 | 55- 62 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 11/ தென்மேற்கு | 11/ தென்மேற்கு | 11/ தென்மேற்கு | 11/ தென்மேற்கு | 11/ தென்மேற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பாசிப்பயறு | நாற்று பருவம் | இறவை பாசிப்பயறில் போதிய பயிர் எண்ணிக்கையை பராமரிக்க விதைத்த 15-ம் நாளில் அதிகப்படியான செடிகளை களைந்து குத்து ஒன்றுக்கு ஒரு ஆரோக்கியமான செடி என்ற அளவில் பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். விதைத்த 3ம் நாளில் களை முளைப்பதற்கு முன்பு இடப்படும் களைக்கொல்லி இடவில்லையெனில் விதைத்த 15-ம் நாளில் கைக்களை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரியில் பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 நாட்களுக்கு ஒரு முறை அளிக்கவும். ஒவ்வொரு உரப்பாசனத்திற்கும் 12- 61 - 0 உரம் 0.69 கிலோ/ எக்டர், 13- 0-45 உரம் 2.47 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 3.96 கிலோ/ எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும். |

குறுஞ்செய்தி-: ஜுன் 21-ல் மழை: 2 மி.மீ. இறவை பாசிப்பயறு- அதிகப்படியான செடிகளை களையவும்; விதைத்த 3ம் நாளில் களைக்கொல்லி இடவில்லையெனில் 15-ம் நாளில் கைக்களை எடுக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி